# (**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

## **SESSIONS CASE NO**. 538/2023 அ.சா.2

Name : **திரு. திருப்பதி**

Father's name : பிச்சை

Village :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.08.2026.

**( எதிரி ஆஜர். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது அவனியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. நான் வழக்கு சம்பவத்தை பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 13.05.2022ம் தேதி காலை 10.00 மணியளவில் அவனியாபுரம் செம்பூரணி ரோடு காட்டுமாரியம்மன் கோவில் அருகே அ.சா.1 கண்ணன் சென்றுகொண்டிருந்தபோது ஆஜர் எதிரி அவரை வழிமறித்து அவரிடம் பணம் கேட்டார் என்றும், அப்போது ஆஜர் எதிரி இடுப்பில் மறைத்து வைத்திருந்த சூரிகத்தியை எடுத்து அ.சா.1 கண்ணனின் கழுத்தில் வைத்து அழுத்தினார் என்றும், அ.சா.1 கண்ணன் சட்டைப்பையில் வைத்திருந்த ரூ.1,100/—ஐ பணத்தை பறித்துக்கொண்டார் என்றும், அப்போது அ.சா.1 கண்ணன் பயத்தில் சத்தம் போடவும் சாட்சி எண்.2 மருதுபாண்டி மற்றும் நானும் ஓடி வருவதை பார்த்து எதிரி அவனியாபுரம் பை பாஸ் ரோட்டின் வழியாக தப்பித்து சென்றுவிட்டார் என்றும்,

அதன்பிறகு நாங்கள் அ.சா.1 கண்ணனை காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னோம் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :– இல்லை.**

**மறு விசாரணை –** இல்லை.

Sd/- திருப்பதி

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.08.25 07:01:23 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.